1967 மார்ச் 30]

மேற்கொண்டு முதல்படியாக எடுக்க உத்தேசம்? அதேபோல் படிப்படியாக எடுக்கப்போவதாக சொல்வதுபோல் சர்க்கார் படிப் படியாக பணத்தையும் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வ தற்கு உத்தேசமுண்டா? இருபது வருடத் தவணையில்?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருப்பதாக முன்பே சொன்னேன்.

THIRU. K. VINAYAKAM: In view of the gravity of this subject and the unusual national interest which this subject has evoked, will the Speaker be pleased to set apart a half-hour debate over this issue?

MR. SPEAKER: I hold that sufficiently large number of supplementary questions have been allowed under this question. We have actually devoted more than twenty-three minutes to this question. We have had nearly a half-hour discussion. I regret I am unable to grant the request.

THIRU. K. VINAYAKAM: One hour is set apart for question time. We have yet got twenty-five minutes. That time can be profitably utilised for this.

MR. SPEAKER: Under Rule 38(2) of the Assembly Rules 'if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question, the Speaker may disallow any supplementary question'. Under that rule I hold that a sufficient number of supplementary questions have already been allowed.

THIRU. K. VINAYAKAM: On a point of personal explanation. I was raising my hand so as to attract your attention to put some more questions. I would like to say that your eye is the most elusive object that God has ever created on the face of the earth. It is very difficult to catch your eye. I tried my best to catch your eye, but it refuses to be caught by me. In view of that only. I asked for a half-hour debate. If the House is pleased to set apart the time, the Speaker also could have been more gracious.

MR. SPEAKER: The hon. Member Vinayakam mentioned very rightly that the Speaker's eye is elusive. The Speaker's eye is bound to be elusive.

இத்துடன் வினக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

உணவுப் பங்கீட்டில் குடும்பக் கார்டு முறை

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார் கள்.

"திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுகாவில், குடும்பக் கார்டு முறை அமுலில் இருந்தும் நகரப்புறங்களில் குறைந்த அளவிலும், கிராமங்களில் விநியோகம் முற்றிலும் நின்று விட்டதால், உணவு தானியம் கிடைக்காமல், மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று தகவல் வந்துள்ளதால் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க" என்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இது அரசினரின் சாதாரண நிர்வாக இயந்திரத்திற்கு உட்பட்ட காரியம் என்ற காரணத்தினால் அதற்காக அவையை ஒத்தி வைக்க தேவை இல்லை என்று கூறுகிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

41 (3) விதியைத் தளர்த்துதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல, இன்று 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூன்று உள்ளன. ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேல் கொண்டு வருவதற்கு விதிகளிலே இடம் இல்லை. ஆகையால் மூன்று தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு இந்தப் பேரவையின் விதியைத் தளர்த்தியாக வேண்டும். எனவே, மன்ற முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட விதியை இன்று மட்டும் தளர்த்தவேண்டு மென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை முன்னுரைப் பார்கள்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்னுரைக்கிறேன் :—

"சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது பிரிவின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேற்பட்டு எழுப்பக் கூடாது என்றுள்ள விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் பருவ மழைக் குறைவினால் திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலூக்காக்களில் பயிர்கள் காய்ந்து சேதம் ஏற்பட்டதின் காரணமாக அங்குள்ள விவசாய மக்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய பலவிதமான கடன் துறைகளின் தவணைத் தொகை ஒரு வருடத்திற்கு அரசாங் கத்தாரால் ஒத்திவைக்கப்பட்டது (ஜீ.ஓ. எம்.எஸ். நெ. 1162, ரெவின்யூ, 6—4—1966). இவ்வருடம் (1967-ல்) மேற்படி கடன்களை